



# ஹர ஹர சங்கரா



FREE COPY
July - 2025
Vol. 4 - ISSUE 09

# KODAMBAKKAM TIMES

# தாம்பூலம்

சுமங்கலிகள் செய்யக்கூடிய தாம்பூல தானமானது லக்ஷ்மி தேவியை மகிழ்விக்கும் செயல்களில் ஒன்று.

வெற்றிலையும் பாக்கும் இணைந்ததே தாம்பூலம் ஆகும். வெற்றிலையில் லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி என மூன்று தேவியும் இருப்பதால் அதை தானம் செய்வோருக்கு பல நன்மைகளை தரக்கூடியதாக இருக்கிறது. என்ன தானம் செய்தாலும் அந்த தானத்துடன் தாம்பூலமும் இணைத்து கொடுப்பது உத்தம பலனை தரும்.

வீட்டிற்கு சுமங்கலிப் பெண்கள் வந்தால் கட்டாயம் தாம்பூலம் கொடுக்க வேண்டும். குறைந்த பட்சம் குங்குமமாவது கொடுக்க வேண்டும்.

வெற்றிலை காமதேனுவின் அம்சம். அதனால் தான் இன்றும் நிச்சயதார்த்த நிகழ்வின் போது வெற்றிலை பாக்கை மாற்றிக் கொள்கின்றனர்.



தெய்வத்தை ஆதாரமாகக் கொண்டு நிச்சயதார்த்தம் செய்யப்பட்ட திருமணத்தை நிறுத்துவது பெரும் பாவத்தைத் தேடித் தரும். எல்லா தெய்வ பூஜைகளிலும் தாம்பூலத்திற்கு முக்கிய இடம் உண்டு. நிவேதனத்திற்கு வெற்றிலை பாக்கு மிகவும் அவசியம்.

சுமங்கலிகள் செய்யக்கூடிய தாம்பூல தானமானது லக்ஷ்மி தேவியை மகிழ்விக்கும் செயல்களில் ஒன்றாகும்.

வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், சீப்பு, கண்ணாடி வளையல், மாங்கல்ய கயிறு, தேங்காய், பழம், பூ, மருதாணி, கண்மை, தட்சணை, வஸ்திரம் முதலானவை சுமங்கலி தானம் செய்யக் கூடிய முக்கியமான மங்கள பொருட்கள் ஆகும். இதில் ஒவ்வொரு பொருளும் ஒரு பலனை சொல்லும்.

மஞ்சள், குங்குமம், மாங்கல்ய கயிறு சுமங்கலித் தன்மையை தரும், சீப்பு கணவனின் ஆயுள் விருத்தி தரும், கண்ணாடி கணவனுக்கு ஆரோக்கியம் உண்டாக்கும், வளையல் மன அமைதியும், பொறுமையும் தரும், தேங்காய் பாவத்தை நீக்கும் (மட்டைத் தேங்காய் சிறப்பு), பழம் அன்னதானப் பலன் கிடைக்கும், பூக்கள் மகிழ்ச்சி பெருகும், மருதாணி நோயிலிருந்து காக்கும், சுபகாரியம் தடையின்றி நடக்கும், கண்மை திருஷ்டி தோஷங்கள் நெருங்காது, இரட்டை வஸ்திரம் புண்ணியம் சேர்வதுடன் தானப்பலனும் வந்து சேரும்.

# மகான் தேரையர்




தனக்கு ஒரு சீடனைத் தேடிக்கொண்டிருந்த அகஸ்தியரிடம், ஔவை ஒரு வாய் பேசாத ராமதேவன் என்ற பெயர் கொண்ட ஒரு சிறுவனைச் சீடனாக அளித்தார். ஒரு சமயம் கூன்பாண்டியன் என்றறியப் பட்ட பாண்டிய மன்னன் ஒருவனுக்குக் கூனை நிமிர்த்தும் பொருட்டு அபூர்வ மூலிகைகளைக் குறிப்பிட்டு அவற்றைத் தேடிக் கொண்டுவரச் சொன்னார் அகஸ்தியர். ராமதேவர் கொண்டுவந்த மூலிகைகளை அரைத்து தைலமாகக் காய்ச்ச அடுப்பில் ஏற்றினார்.

வேறொரு வேலையின் நிமித்தம் வெளியே சென்ற அகஸ்தியர், ராமதேவனிடம் கவனித்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டுச் சென்றார். கொதிக்கும் சாறு நிரம்பிய பாத்திரத்தின் மேலே கூரையில் வேயப்பட்டிருந்த வளைந்த மூங்கில் ஒன்று கொதிக்கும் சாற்றின் ஆவியால் நிமிர்ந்ததைக் கண்ட ராமதேவன் அடுப்பிலிருந்த சாறு தைலமாகப் பதமாகிவிட்டதென யூகித்து இறக்கி வைத்தார்.

திரும்பிய அகஸ்தியரிடம் நடந்ததைச் சைகையால் விளக்க, அவரைப் பாராட்டி மன்னனின் கூன் முதுகில் தைலத்தைத் தடவி சிகிச்சை செய்யக் கூன் நிமிர்ந்தது.

மற்றொரு முறை மன்னன் காசிவர்மனுக்கு பொறுக்க முடியாத தலைவலி அகஸ்தியரிடம் சிகிச்சை பெற வந்த மன்னனைப் பரிசோதித்து மன்னன் உறங்குகையில் மூக்கின் வழியாக தலைக்குள் சென்ற சின்னஞ்சிறு தேரைதான் காரணம் என்று கண்டுபிடித்தார். மன்னனிடம் அகஸ்தியர் அதற்கு சிகிச்சையளித்து குணப்படுத்துவதாக வாக்களித்தார்.

மன்னனுக்கு ஆழ்ந்த மயக்கம் அளிக்கப்பட்டு மன்னனின் கபாலம் திறக்கப்பட்டது. மூளையின் மேற்பகுதியில் உட்கார்ந்திருந்த தேரையை வெளியேற்ற முயன்ற அகஸ்தியரின் முயற்சி எளிதில் பலிக்கவில்லை. சட்டென்று ராமதேவர் நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றை மன்னனின் தலைக்கருகில் தேரையின் பார்வை படும் வகையில் வைத்தார். நீரைக் கண்ட தேரை பாத்திரத்திற்குத் தாவியது.

மன்னனின் கபாலத்தை சந்தானகரணி என்னும் மூலிகையால் இணைத்து மூடினார் அகஸ்தியர். மயக்கம் தெளிந்து எழுந்த மன்னனின் தலைவலி மறைந்து

போயிருந்தது. பாராட்ட வார்த்தைகளின்றி அகஸ்தியருக்கும், ராமதேவருக்கும் ஏராளமான வெகுமதிகள் வழங்கினான் மன்னன்.


ராமதேவரின் சமயோஜிதத்தால் மகிழ்ந்த அகஸ்தியர், அவரின் பேசும் திறனை சிகிச்சையால் மீட்டார். தனக்குத் தெரிந்த அத்தனை வைத்திய முறைகளையும் அவருக்குக் கற்றுக்கொடுத்தார். ராமதேவரின் பெயரையும் தேரையர் என்று மாற்றி, அவரின் புகழ் எங்கும் பரவச் செய்தார்.

---

# மகாபெரியவா மகிமை

மகாபெரியவா சன்யாசம் ஏத்துண்டு ஆசார்யாளா பீடம் ஏத்துண்டு பத்துப் பன்னிரண்டு வருஷத்துக்கு அப்புறம் நடந்த சம்பவம் இது.

அப்போ ஆசார்யாளுக்கு சின்ன வயசு அவரோட மகிமையெல்லாம் பலருக்கும் புரியாத காலகட்டம். மடத்துக்கு புதுசா வர்ற பக்தர்கள் பலர் ஆச்சார்யா இவ்வளவு சின்னவரா இருக்காரே இவர்கிட்டே நம்ம பிரச்சனையைச் சொல்லலாமா? வேண்டாமா?ன்னு தயங்குவது உண்டு.



வேதம், புராணங்கள்ல சந்தேகம் கேட்க வர்றவாளா இருந்தா, இவருக்கு அதெல்லாம் தெரிஞ்சிருக்குமா? கேட்கலாமான்னு தயங்கி நிற்பா. சிலர் இன்னும் ஒருபடி மேலேபோய் இவர்கிட்டே எதுக்கு நம்ம குறையைச் சொல்லணம்னு அப்படியே திரும்பிப் போயிடலாம்னு நினைக்கிறதும் உண்டு. ஆனா யாரா இருந்தாலும் ஒரே ஒருதரம் மகாபெரியவா முன்னால வந்து நின்னுட்டான்னா அவாளோட எல்லா சந்தேகமும் போயிடும்.

உதிக்கறப்போ சூரியன் பால சூரியனாதான் இருக்கும். அது உச்சியில ஏறினத்துக்கு அப்புறம்தான் அதோட உக்ரம் தெரியும்கற மாதிரி தொலைவுல இருந்து பார்க்கறச்சே பாலகனா தெரியற பரமாசார்யா முன்னால வந்து நின்னாதான் அவர் பாலகன் இல்லை பரமேஸ்வரன்னே புரியும்.

அந்த மாதிரியான காலகட்டத்துல ஒருநாள் மகாபெரியவாளை தரிசனம் பண்றதுக்காக நிறைய பேர் மடத்துக்கு வந்திருந்தா.

அவாள்ல வெளியூர்லேர்ந்து காஞ்சிபுரத்துக்கு க்ஷேத்ராடனம் வந்த பக்தர் கூட்டம் ஒண்ணும் இருந்தது. காமாட்சியை தரிசனம் பண்ண வந்த அவாள்லாம் இங்கே ஆசார்யா இருக்கார்னு தெரிஞ்சதும் அவரை தரிசனம் செய்ய வந்திருந்தா.

வந்தவாள்ல பலர் ஆசார்யாளை தரிசனம் பண்ணறது இதுதான் முதல் தரம். சிலர் ஏற்கனவே வந்தவா. ஏற்கனவே வந்திருந்தவா ஆசார்யாளோட பெருமையை வராதவாளுக்கு சொல்லிண்டு இருந்தா.

அப்போ அந்தக் கூட்டத்தோட வந்திருந்த ஒரு தம்பதி "இங்கே மடத்துல ஆசார்யா இருக்கார்னதும் அவர்கிட்டே எங்க பிரச்னை ஒண்ணைச் சொல்லி அதுக்குப் பரிகாரம் ஏதேனும் இருக்கான்னு கேட்கலாம்னு நினைச்சுண்டுதான் வந்தோம். இங்கே வந்து பார்த்தா அவர் ரொம்ப சின்னவரா இருக்கார். இவர்கிட்டே எப்படி எங்க பிரச்னையைச் சொல்றது? அதுக்கு ஆலோசனை எப்படிக் கேட்கறது? இதெல்லாம் சரியாவராதுன்னு தோணித்து. அதான் வெளியில வந்துட்டோம்" என்று அவா சொல்லிண்டு இருந்த சமயத்துலயே ஆசார்யாளோட அணுக்கத் தொண்டர் அங்கே வந்தார்.

"இங்கே தீராத வயத்து வலியால தவிக்கற ஒரு மாமி வந்திருக்காளாமே, அவாயாரு? அவாளை ஆசார்யா அழைச்சுண்டு வரச் சொன்னார்" அப்படின்னார். அதைக் கேட்டதுதான் தாமதம் அப்படியே பதறிப்போனா அந்த தம்பதி.

அந்த மாமி கொஞ்சம் தயக்கத்தோட "எனக்குதான் வயத்துவலி" என்று வார்த்தைகளை முடிக்காமல் இழுக்க, அந்த தொண்டர் அவசரமா அவாளை கூட்டிண்டு போனார்.

மகாபெரியவா முன்னாலபோய் நின்னா, அந்தத் தம்பதி. இவர் எப்படி என்னோட வயத்துவலியைத் தெரிஞ்சுண்டார்ங்கிற மாதிரியான ஆச்சரியம் அந்த மாமி முகத்துல பட்டவர்த்தனமா தெரிஞ்சுது.


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

**COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar**

**K K NAGAR & VADAPALANI EDITION**

**COVERING AREA :**

**Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam**

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

E-mail : kodambakkamtimes@yahoo.com

"என்ன அடிவயத்தைப் பிசையறாப்புல வலிக்கிறதா? டாக்டர்களெல்லாம் அல்சர் ரொம்ப அதிகமாயிடுத்து, தீவிர சிகிச்சை பண்ணியாகணும்னு சொல்றாளா?" அவாகிட்டே கேட்டுண்டே சாத்துக்குடி பழம் ஒண்ணை எடுத்து கையில வைச்சு உருட்டிண்டு இருந்தார் மகாபெரியவா.

"ஆமாம் நேரத்துக்கு சாப்பிடாததால வயத்துல அமிலம் அரிச்சு புண்ணாயிடுத்தாம். குணப்படுத்தறது ரொம்ப கஷ்டம்னு சொல்றா. அடிக்கடி தாங்க முடியாம வலிக்கிறது" சொன்ன அந்த மாமியோட கண்ணுல இருந்து வலி தாங்காம ஜலம் வழியத் தொடங்கித்து.

தான் கையில் வைச்சு உருட்டிண்டு இருந்த சாத்துக்குடியை சட்டுனு அந்த மாமியோட ஆத்துக்காரர் கிட்டே தூக்கிப் போட்டார் மகாபெரியவா. "அதை உடனே உரிச்சுக் குடு" கட்டளை மாதிரி சொன்னார்.

ஏதோ ஒரு உத்வேகத்துல அவரும் அந்தப் பழத்தை உரிச்சு ஆத்துக்காரிக்குக் குடுத்தார். தாங்க முடியாத வயித்துவலியில் தவிச்சுண்டு இருந்த அந்த மாமி ஒவ்வொரு சுளையா வாங்கி ஏதோ குழந்தை சாப்பிடறாப்புல சாப்பிட்டு முடிச்சா. இத்தனையும் ஒரு சில நிமிடத்துல நடந்துடுத்து.

அதுக்கு அப்புறம் நடந்ததுதான் பேரதிசயம். அதுவரைக்கும் வலியால துடிச்சுண்டு இருந்த அந்த மாமி, இதுவரைக்கும் வலிச்சதெல்லாம் கனவா? நனவா?ங்கற மாதிரி ரொம்பவே சந்தோஷமா பேச ஆரம்பிச்சுட்டா.

இதுவரைக்கும் என்னை வாட்டிண்டு இருந்த வலி போன இடம் தெரியலை. சாதாரணமா இந்த வலி வந்துட்டா ரெண்டு, மூணு மணி நேரமாவது என்னை வாட்டி வதைச்சுடும். மருந்து எடுத்துண்டாலும் அது வேலை செய்யறவரைக்கும் சகிச்சுண்டு இருக்கணும். ஆனா இப்போ ரொம்பவே ஆச்சரியமா எனக்க வலி போன இடம் தெரியலை.

ஆசார்ய தந்த பழத்தோட முதல் சுளையைத் தின்னதுமே என்னோட வலி குறைய ஆரம்பிச்சுடுத்து. முழுசாதின்னு முடிச்சதும் எனக்கா வலிச்சதுங்கறமாதிரி பூரணமா நிவர்த்தி ஆயிடுத்து. வார்த்தைகள் நெகிழ கண்ணு கசிய சொன்னார் அந்த மாமி. மறுகணம் அவர் கணவர் அப்படியே சாஷ்டாங்கமா ஆசார்யா திருவடியிலே விழுந்தார்.

"எங்களை மன்னிச்சுடுங்கோ இவ்வளவு சின்னவரா இருக்கேளேன்னு நாங்க சந்தேகப்பட்டோம். ஆனா, நாங்க சொல்லாமலே என் ஆத்துக்காரியோட பிரச்சனையைத் தெரிஞ்சுண்டு, அது போகறதுக்கு மருந்தாட்டம் ஒரு கனியைப் பிரசாதமாகவும் தந்து எங்க கண்ணைத் திறந்துட்டேள்" தழுதழுப்பா சொன்னார்.

மௌனமா ஒரு புன்னகையை மட்டும் பதிலாக்கி அந்தப் பெண்மணிகிட்டே கொஞ்சம் குங்குமப் பிரசாதத்தைக் குடுத்து ஆசிர்வதிச்சார் மகாபெரியவா.

அந்த பெண்மணிக்கு தீராத வயத்துவலின்னு ஆசார்யாளுக்கு எப்படித் தெரிஞ்சுதுங்கறது அதிசயம்னா, அதைவிட பேரதிசயம் ஒரே ஒரு சாத்துக்குடியைத் தந்து அவாளோட வியாதியைப் போக்கினது. இதெல்லாம் சாட்சாத் அந்தப் பரமேஸ்வரனோட அம்சமான மகாபெரியவாளோட லீலை இல்லாம வேறு என்ன.

# ஏன் தாயாரை சேவித்த பிறகே பெருமாளை சேவிக்க வேண்டும்?

இந்த ஜகம் முழுவதையும் பகவான் ஒருவன்தான் ரக்ஷிக்கிறான் அப்படி இருக்க முதலில் தாயாரை சேவித்த பின் ஏன் பெருமாளை சேவிக்க வேண்டும்.

குகனை முதலில் சீதா பிராட்டியையும், லட்சுமணனையும் ஏற்றுக் கொள்ளும்படியாகச் செய்த பிறகே குகனை தான் கடாக்ஷிக்கிறாராம் ராமபிரான்.

ஸ்ரீரங்கநாதரிடம் பிரார்த்திக்கும்போது, ஸ்ரீரங்கநாச்சியாரை முன்னிட்டே பிரார்த்திக்கிறார் ஸ்ரீ ராமாநுஜர்.



ஏன் நாம் நேராக பெருமாளிடம் போய் கேட்டுக்கொள்ளக் கூடாதா? பெற வேண்டியவன் நானாகவும், கொடுக்க வேண்டியவன் பெருமாளாகவும் இருக்கும் போது நேராக பெருமாளிடமே பெற்றுக்கொள்ளலாமே. இடையில் பிராட்டியார் எதற்கு?

இதற்கு பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் செய்யும்போது சொல்கிறார் கொடுப்பவன் பகவானாக இருந்தாலும் அந்த பகவானே உபாயம் என்பதில் நமக்கு உறுதியான எண்ணம் இருக்க வேண்டும் அல்லவா, அந்த உறுதியான எண்ணத்தை அதாவது உபாய நிஷ்டையை நமக்கு அருள்பவள்தான் மஹாலக்ஷ்மி பிராட்டியார். மஹாலக்ஷ்மியின் கடாக்ஷத்தால் பகவானிடம் உறுதியான பக்தி ஏற்பட்டுவிட்ட பிறகு நடப்பது நடக்கட்டும் என்று கவலை இல்லாமல் விச்ராந்தியாக இருந்துவிடலாம், இல்லையென்றால், தினமும் கவலைப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டியதுதான்.

ஒருவர் இருக்கிறார் அவர் காலையில் எழுந்ததில் இருந்தே எதற்காவது கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார். அதேசமயத்தில் பகவான் கிருஷ்ணர் அருளிய

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேஹம் சரணம் வ்ரஜ
அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஸுச :

என்ற சுலோகத்தையும் சொல்லிக் கொண்டே இருப்பார்.

"உன்னுடைய எல்லா பாவங்களில் இருந்தும் உன்னை நான் விடுவிக்கிறேன் அப்படி இருக்க நீ ஏன் சோகப்படுகிறாய்?" என்ற அர்த்தத்தில் கிருஷ்ணர் அருளிய இந்த சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே அவர் நாள் முழுவதும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் அவருக்கு பகவானிடத்தில் உறுதியான நம்பிக்கை ஏற்படவில்லை என்றுதான் பொருள். காரணம் மஹாலக்ஷ்மியின் கடாக்ஷம் அவருக்குக் கிடைக்கவில்லை.

நாம் எல்லோரும் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்றால் நாம் தான் நம் குடும்பத்தையே காப்பாற்றிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த நினைப்புதான் நம்மை எப்போதும் கவலையில் ஆழ்த்திவிடுகிறது. உண்மையில் நாமா எல்லோரையும் காப்பாற்றுகிறோம்?

கூரத்தாழ்வார் ஒரு சுலோகத்தில், நான் போன பிறகு என் மனைவியை யார் காப்பாற்றுவார்கள் என்று இத்தனைநாள் நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன் சட்டென்று ஒருநாள் நான் புரிந்து கொண்டேன் எனக்குப் பிறகு அவர்கள் இன்னும் நன்றாக இருப்பார்கள் என்று.

இத்தனை நாளாக நான் தான் அவளை ரக்ஷித்துக் கொண்டிருந்ததாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், பகவான்தான் அவளை மட்டுமல்ல என்னையும் சேர்த்தே ரக்ஷித்துக்கொண்டிருக்கிறார் என்பதை இப்போது நான் புரிந்துகொண்டேன். "இதுவரை என்னையும் என் மனைவியையும் ரக்ஷித்து வந்த பகவான், என் மனைவியை நான் போன பிறகும்கூட ரக்ஷிக்கத்தான் போகிறான்" என்கிறார்.

இந்த ஜகம் முழுவதையும் பகவான் ஒருவன்தான் ரக்ஷிக்கிறானே தவிர, கணவன் ரக்ஷிக்கிறான், மாதா பிதாக்கள் ரக்ஷிக்கிறார்கள், சொத்துக்கள் ரக்ஷிக்கும் என்றெல்லாம் நினைப்பது அபத்தம். பகவான் மட்டுமே ரக்ஷகர். ஆனால், அவர் அப்படி ரக்ஷிக்க வேண்டுமானால் அவர் திருமகளோடு சேர்ந்து இருக்க வேண்டும்.

அதனால்தான் ஆழ்வார் பாடுகிறார் :

"ஞாலத்தோடே நடந்தும் நின்றும் கிடந்திருந்தும்
சாலப்பலநாள் உகந்தோறு உயிர்கள் காப்பானே
கோலத்திருமாமகளோடு உன்னைக் கூடாதே
சாலப்பலநாள் அடியேன் இன்னும் தளர்வேனோ"

திருமகளோடு சேர்ந்திருந்து இந்த உலக உயிர்களை யுகங்கள்தோறும் காத்து ரக்ஷிக்கும் உன் திருவடிகளை அடையாமல் நான் இன்னும் எத்தனை நாள்தான் துன்பப்படுவது என்று கேட்கிறார்.

எனவே முதலில் மஹாலக்ஷ்மியையும் பிறகு பெருமாளையும் சேவிக்க வேண்டும்.

ஒருவரை சேவித்துவிட்டு மற்றவரை சேவிக்காமல் இருக்கக் கூடாது. அதாவது இருவருடைய திருவடிகளையும் ஒருசேரப் பற்றிக் கொள்ள வேண்டும். இருவரிடமும் பற்றுக் கொள்ள வேண்டும்.



# கோபூஜை நற்பலன்கள்

கோ என்றால் உலகம், உலகில் உள்ள சகல ஜீவன்களுக்கும் தன் பாலை கொடுக்கும் தாய் போல் விளங்குவதால் பசுவை கோமாதா என்கிறோம்.

பகவான் பிரம்மா தனது சிருஷ்டியில் உலகம் உய்ய முதலில் பசுவை படைத்து அதன் உடலில் பதினான்கு உலகையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் இருக்கச் செய்தார். அதில் முதலில் வந்தவர்களான தர்மராஜனையும், காலதேவனையும் முகத்தில் இருக்க செய்தார், மற்றவர்கள் உடல் எங்கும் குடியேற செய்தார். இதில் கங்கை, மகாலட்சுமி இருவரும் தாமதமாக வந்தார்கள். இதனால் மஹாலட்சுமிக்கும், கங்கைக்கும் பசுவின் உடலில் இடம் இல்லை என்கிறது தேவிபாகவதம்.

கோமாதாவின் உடலில் இடம்பெற லட்சுமியும், கங்கையும் மிகவும் வேண்டினார்கள். எங்கேயாவது இருக்க ஓர் இடம் கொடுத்தால் போதும் என்றனர். கோமாதாவும் உடலிலிருந்து வரும் சாணம், கோமூத்திரம் இரண்டும் யாருக்கும் சொந்தமாகவில்லை. நீங்கள் விரும்பினால் அதில் இருக்கலாம் என்று சொல்ல லட்சுமியும் கங்கையும் மிகுந்த சந்தோஷத்துடன் அந்த இடத்தில் இருக்க சம்மதித்தார்கள். அதனால் இன்றைக்கும் பசுவின் பின்புறத்தில் லட்சுமியும், கங்கையும் இருப்பதாக சாஸ்திரம். அதனால் பசுவின் சாணமும், கோமூத்ரமும் சகல பாபங்களையும் போக்கி லட்சுமி கடாட்சம் அளிக்கக் கூடியது என்கிறது தர்ம சாஸ்திரம்.

பிரம்மஹத்தி தோஷம் இருப்பவர்கள் பசுவைத் தானமாகக் கொடுத்தால் அந்த தோஷம் எல்லாம் விலகும் என்று அதர்வண வேதம் சொல்கிறது.

கோ பூஜை சகல வித தோஷத்தையும் நீக்கும். அதனால்தான் கோ பூஜை மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. பசுவை வழிபட்டால் எல்லா தெய்வங்களையும் வழிபட்ட பலனை அடையலாம் என்கின்றன புராணங்கள். பல கோடி யாகங்கள் செய்த பலனும், ஏழேழு ஜென்மங்கள் தவம் இருந்த புண்ணியமும் ஒரே ஒரு முறையில் கிடைத்து விடும்.

அந்த காலத்தில் முனிவர்கள் கோ பூஜையை விரும்பிச் செய்தார்கள்.

ஆதிசங்கரர் பசு தான் இந்த உலகிற்கு அன்னை என்று சொல்லி அதன் பெருமையை உலகிற்கு சொல்லி இருக்கிறார்கள்.

பசு நுழைந்த வீட்டில் தீய சக்திகள் அண்டாது. முன்பு அரசர்களின் ஊர்வலங்களில் பசுதான் முதலில் செல்லும். அதிகாலையில் பசுவை தரிசனம் செய்தால், எல்லா தீர்த்தங்களிலும் நீராடிய பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

வீட்டில் கிரகப்பிரவேசம் செய்யும் பொழுது, கோபூஜை செய்து பசுவும், கன்றும் வீட்டிற்குள் நுழைந்த பிறகே வீட்டினர் குடியேறுவர். இவ்வாறு செய்வதால் சகல தோஷங்களும் விலகி, சகல சம்பத்தும் கிடைக்க அது வழிகாட்டும் என்பது நம்பிக்கை.

**"பஞ்சகவ்யம்" :**

பால், தயிர், வெண்ணெய், கோமியம், சாணம் இந்த ஐந்தும் கலந்த கலவையே சக்தி பெற்ற "பஞ்சகவ்யம்" என்று அழைக்கப்படுகிறது. வீட்டில் குழந்தை பிறந்து புண்யாகவாசனம் சடங்கு செய்யும் போது பஞ்சகவ்யம் தம்பதியருக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படும்.

**கோ பூஜை :**

பசுவின் வாலைத் தொட்டுக் கும்பிட்டாலே வந்த தடைகள் விலகும். கோவில்களில் அதிகாலை நேரம் நடைபெறும் கோபூஜையில் கலந்து கொண்டால் சகல ஐஸ்வர்யங்களும் இல்லத்தில் குடிகொள்ளும். மேலும் கிரக தோஷங்கள், பாவங்கள், சாபங்கள் அகல எளிய வழிபாடு கோ பூஜை தான்.

பசுவின் உடம்பில் அனைத்து விதமான தெய்வங்களும், தேவர்களும், முனிவர்களும், நவக்கிரகங்களும் குடியிருப்பதால் கோபூஜை செய்யும் பொழுது அனைவருடைய பரிபூரணமான அருளும் நமக்குக் கிடைப்பதோடு அனைத்து விதமான தோஷங்களும் நிவர்த்தியடைகின்றன.

பசுவை கன்றுடன் சேர்த்து மூன்று முறை வலம் வந்து நமஸ்காரம் செய்து கீழ் உள்ள மந்திரத்தை சொல்ல நற்பலன்கள் கிடைக்கும்.

ஓம் காமதேனுவே நமஹ
ஓம் சகல தேவதா ரூபிணியே நமஹ
ஓம் மகா சக்தி ஸ்வரூபியே நமஹ
ஓம் மகாலட்சுமி வாசின்யை நமஹ
ஓம் வ்ருஷப பத்னியே நமஹ



ஓம் சௌபாக்ய தாரிண்யை நமஹ
ஓம் சர்வ ரட்சிண்யை நமஹ
ஓம் ரோஹ நாசின்யை நமஹ
ஓம் ஜய வல்லபாயை நமஹ
ஓம் சக்ஷீர தாரிண்யை நமஹ
ஓம் பபிலாயை நமஹ
ஓம் சுரப்யை நமஹ
ஓம் சுசீலாயை நமஹ
ஓம் மாகா ரூபிண்யை நமஹ
ஓம் சகல சம்பத் தாரிண்யை நமஹ
ஓம் சர்வ மங்களாயை நமஹ

பின்னர் அகத்திகீரையை பசுவிற்கு கொடுக்கலாம். இதனால் சகல தெய்வங்களின் ஆசியும் பரி பூரணமாக கிடைக்கும். எல்லா திருக்கோயில்களுக்கும் சென்று வந்த புண்ணியமும் கிட்டும்.

வீடுகட்டும் போது பாதியில் நின்றாலோ, வீடு கட்டுவதில் தடைகள் வந்தாலோ அந்த இடத்தில் கோமியத்தை தெளித்து, பசுவையும் அந்த இடத்தைச் சுற்றிவரச் செய்தால் இல்லம் கட்டுவதில் இருந்த தடை அகலும்.

அஷ்டமத்துச்சனி, ஏழரைநாட்டுச்சனி, கண்டகச் சனி போன்ற சனி ஆதிக்கங்கள் உள்ளவர்கள் சனிக்கிழமை பசுவிற்கு அகத்திக் கீரை கொடுப்பது நல்லது.

பொதுவாக ஒவ்வொருவரும் இல்லத்தில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் கோமியம் தெளித்தால் கண் திருஷ்டி மற்றும் மனக்குழப்பங்கள் போய் மகிழ்வான வாழ்க்கையும் மகாலட்சுமியின் கடாட்சமும் கிடைக்கும். பசுவுடன், கன்றையும் சேர்த்து வழிபட வேண்டும் அப்பொழுதுதான் முழுமையான நற்பலன்கள் கிடைக்கும்.

பூஜையறையில் கோமாதா அல்லது பசுவும் கன்றும் இணைந்த படம் அல்லது விக்ரகத்தை வைத்து வழிபட்டு நற்பலன்களை பெறுவோம்.

# ஆடித்தபசு



ஆடி மாதம் என்றவுடன் நம்முடைய மனத்திலும் எண்ணத்திலும் நிறைபவள் அம்மன் தான். ஆடி செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடி பூரம், ஆடி பதினெட்டு, வரலெட்சுமி விரதம் என அனைத்தும் அம்மனுக்குரிய நாட்களை கொண்டதாக அமைந்த மாதம் ஆடி மாதமாகும். இம் மாதத்தில் அப்பனே, அம்மைக்குள் அடக்கம் என்பதால் அம்பிகையை பிரதானமாக கொண்டு அனைத்து விழாக்களும் கொண்டாடுவது வழக்கம். அவ்வாறு ஆடி மாதத்தில் கொண்டாடப்படும் மிக முக்கியமான விழாக்களுள் ஒன்று ஆடித்தபசு விழா ஆகும். இத் திருநாள் அம்பிகை வழிபாட்டிற்கு மட்டுமின்றி சைவ - வைணவ ஒற்றுமையை விளக்கும் நாளாகவும், அஞ்ஞானத்தை போக்கும் நாளாகவும் அமைகிறது. இவ்விழா கொண்டாடப்படும் சங்கரன் கோவில் தலத்தின் வரலாறு, ஆடித்தபசுக்கும் அம்பிகைக்கும் உள்ள தொடர்பு மற்றும் வணங்குவதால் கிடைக்கும் பலன்கள் பற்றியும் தெரிந்து கொள்வோம்.

சங்கன், பதுமன் என்ற இரு நாக வம்சத்தை சேர்ந்த அரசர்கள் முறையே ஹரனையும், ஹரியையும் வழிபட்டு வந்ததோடு மட்டுமல்லாமல் பெரிய பிரச்சனையாக மாறியது அவர்களது வழிபாடு. இதற்கு தீர்வு காண அன்னையிடம் சென்று தங்கள் வாதங்களை அவர்கள் கூற, அதனை கேட்ட அன்னை ஹரியும், ஹரனும் ஒன்று தான் என்று கூறினார். அதனை தாங்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்வது என அவர்கள் கேட்க. உரிய காலம் வரை காத்திருங்கள் என பதில் கூறி அவர்களை அனுப்பி வைத்தார் அம்பிகை.

பின்னர் சிவபெருமானிடம் சென்ற அம்பிகை "நாக அரசர்கள் மட்டுமின்றி அனைவருக்கும் ஹரியும், ஹரனும் ஒன்று தான் என்பதை உணர்த்த தாங்கள் இருவரும் இணைந்து காட்சி தர வேண்டும்" என்று கேட்டார். ஆனால் எம் பெருமானோ, "அது எளிதானது அல்ல என்றும் இத்தகைய நிகழ்வு நடைபெற

வேண்டுமானால் அதற்கு பெரிய தவம் செய்யவேண்டும் என்றார். உலக நன்மைக்காக அம்பிகை தாமே தவம் செய்வதாக கூறினார். இதனை கேட்ட சிவபெருமான் புன்னை மரங்கள் நிறைந்த வனத்தில் முனிவர்கள் பலர் எம்மை நோக்கி தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து நீயும் தவம் மேற் கொள்வாய். உரிய காலத்தில் நாங்கள் உங்களுக்கு காட்சி அளிப்போம் என்றார்.

தவக்கோலத்தில் அம்பிகை புறப்பட தேவலோக பெண்கள் மற்றும் பணிப் பெண்கள் என அனைவரும் அவருடன் வருவதாக கூறி பசுக்களின் வடிவில் அன்னையுடன் புன்னை மர வனத்திற்கு வந்தனர். அன்னை அங்கு ஊசி முனை மீது ஒற்றைக் காலில் கடும் தவம் புரிந்தார். அம்பிகை, தேவர்கள், முனிவர்கள் ஆகியோரின் தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் ஒரு பாதி சங்கரனாகவும், மறு பாதி நாராயணாகவும் இணைந்து சங்கர நாராயணாக காட்சி தந்து அருளினார். அந்த நாளே ஆடி மாதத்தில் கொண்டாடப்படும் சிறப்பு வாய்ந்த திருநாளான ஆடித்தபசு விழாவாகும்.

கோவாகிய பசுக்கூட்டத்துடன் மதி போன்ற அழகிய முகத்துடன் வந்து தவம் செய்தமையால் இந்த அம்பிகைக்கு கோமதி அம்மன் என்று பெயர். சங்கரன் கோவில் சிவ தலமாக இருந்தாலும் பிரதான தெய்வமாக கோமதி அம்மனே அருள் பாலிக்கிறாள்.

ஆடி பௌர்ணமிக்கு பத்து நாட்களுக்கு முன்பு சதுர்த்தி திதியில் கோமதி அம்மன் சந்நிதி முன்புள்ள தங்க கொடி மரத்தில் கொடியேற்றம் நடக்கும். கோமதி அம்மனுக்குரிய தனிப் பெரும் விழா என்பதால் அம்பாளுக்கே கொடியேற்றம் செய்யப்படுகிறது. தொடர்ந்து 10 நாட்களும் காலை, மாலை வேளைகளில் பல விதமான அலங்காரத்தில் மண்டகப்படி கட்டிடத்திற்கு அம்பாள் எழுந்தருளுகிறார். இரவு அம்பிகை வீதி உலா வருகிறாள். ஒன்பதாம் நாள் காலையில் ரத உற்சவம் நடைபெறும். 11ம் நாள் காலையில் யாக சாலை மண்டபத்தில் கோமதி அம்மன், சங்கரலிங்க சுவாமி, சங்கர நாராயண சுவாமி ஆகிய உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேகம் மற்றும் அலங்காரம் நடைபெறும். இதனை தொடர்ந்து கோமதி அம்மன் தபசு கோலத்தில் தங்கச் சப்பரத்தில் எழுந்தருளி தபசு மண்டபத்திற்கு செல்கிறாள்.

ஆடி பௌர்ணமி தினத்தில் மாலை வேளையில் சுவாமி வெள்ளி ரிஷப வாகனத்தில் ஸ்ரீ சங்கர நாராயண மூர்த்தியாக தபசு கோலத்தில் உள்ள அம்பிகைக்கு காட்சி அளிக்கிறார். பின்னர் இரவு வேளையில் வெள்ளி யானை வாகனத்தில் அம்பாளுக்கு சங்கர லிங்க சுவாமியாக அருள் பாலிக்கிறார்.

சங்கன் மற்றும் பதுமன் என்ற இரு நாக அரசர்கள் வழி பட்ட தலம் என்பதால் இங்கு புற்று மண் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது. இந்த மண் மருத்துவ குணங்கள் கொண்டது என்று நம்பப்படுகிறது. பல விதமான சரும நோய்கள் மற்றும் விஷக் கடிகளுக்கு இப்புற்று மண் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. பல விதமான சிறப்புகளை கொண்ட சங்கரன் கோவில் அம்மையையும், சங்கர நாராயண சுவாமியையும் ஆடித்தபசு திருநாளில் மட்டுமின்றி நேரம் கிடைக்கும் போது சென்று வணங்கி அருள் பெற்று வாழ்வில் இன்புறுவோம்.

....... ஹேமலதா க்ருஷ்ணகுமார்

# நாராயண அஷ்டாக்ஷரம்



சிவவாக்கியர் கூறும் மந்திரம் ஓம் நமோ நாராயணாய எனும் எட்டெழுத்து மந்திரம், மனதில் நினைத்துக் கொண்டு நூறு உருப்போட்டால் பஞ்சமாபாதகங்கள் செய்திருந்தாலும் அவை பஞ்சுபோல் மறைந்து விடும். அஷ்டாக்ஷரம் என்பது எட்டெழுரத்தைக் குறிக்கும்.

**ஓம் நமோ நாராயணாய**

ஓம் என்பது ஒரெழுத்தாகவும், நம என்பது இரண்டெழுத்தாகவும், நாராயணாய என்பது ஐந்தெழுத்தாகவும், ஆக மொத்தம் எட்டெழுத்தும் சேர்ந்து நாராயண அஷ்டாக்ஷரம் எனப்படும். இதைத் தொடர்ந்து கூறிவர நிறைந்த ஆயுள் கிடைக்கும். எல்லாவித ஆபத்துக்களும் நீங்கும், தீமைகள், துன்பங்கள் தொடராது, முக வசீகரம் கிடைக்கும், எல்லாச் செல்வங்களும் கிட்டும், காலையில் இதை கூறுபவன் இரவில் செய்த பாவத்தை நாசம் செய்கிறான், மாலையில் கூறுபவன் பகலில் செய்த பாவத்தை நாசம் செய்கிறான். மாலையில் கூறுபவன் பகலில் செய்த பாவத்தை நாசம் செய்கிறான். உச்சிப்பொழுதில் கூறுபவன் ஐந்துவித மகா பாதகங்கள், உப பாதகங்களிலிருந்து விடுபடுகிறான், எல்லா வேதங்களையும் ஓதிய புண்ணியத்தை அடைகிறான்.

மேற்கூறிய அனைத்தும் நாராயண உபநிஷத்தில் உள்ளவை.

குலந்தரும் செல்வந்தந்திடும் அடியார்
படுதுயராயின வெல்லாம்
நிலந்தரச் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

# KRISHNA DELISH COFFEE




## எங்களிடம் தரமான காபி
## கொட்டை அரைத்து தரப்படும்

## 1 கிலோ காபி பவுடர்
## ரூ 920 மட்டுமே

---

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 20 only



**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

* Condition Apply

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore
Ganapathy's
CELEBRATING
83 Years
ANNIVERSARY
Since 1942

மயிலாப்பூர்
# கணபதிஸ்
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

### பாரம்பரியமாக 1942 முதல்

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com
ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com